9th August 1960]

Award of prizes to efficiently-managed schools

***35 Q.—Sri A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் திறமையாக நடைபெறும் பள்ளிகளுக்குப் பரிசளிக்கும் திட்டம் எப்போதிலிருந்து அமுலுக்கு வரும்? அதன் விவரம் என்ன?

(ஆ) பரிசுக்குத் தகுதியுள்ள பள்ளிகளைத் தேர்ந்தெடுக்க வகுத்திருக்கும் முறை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) There is no scheme for the award of prizes to efficiently-conducted schools in this State.

(ஆ) Does not arise.

SRI A. VEDARATHNAM : திறமையுள்ள ஆசிரியர்களுக்கு பரிசு கொடுப்பதற்குப் பதிலாக நல்ல முறையில் திறமையாக நடத்தப்படும் பள்ளிகளுக்கு பரிசு கொடுக்க அரசாங்கம் முன் வருமா? அப்படிக் கொடுத்தால் அங்கு வேலை செய்யும் ஆசிரியர்களுக்குள் "டீம் ஸ்பிரிட்" ஏற்படுவதற்கு அது உதவியாக இருக்காதா? அரசாங்கம் இதைக் கவனிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆசிரியர்கள் சரிவர பாடம் கற்பித்தால்தான் பள்ளிக்கூடம் நன்றாக நடைபெறும். ஆகையால்தான் ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்குவதுதான் சரி என்று மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

SRI K. B. S. MANI: இந்தப் பரிசுகளை சென்னை அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் ஆசிரியர்களுக்கு வழங்குவதில் . . . .

MR. SPEAKER: நாம் இப்போது 35-வது கேள்வியில் இருக்கிறோம். ஆனால் அங்கத்தினர் கேட்கும் கேள்வி 34-வது கேள்வியைப் பற்றியதாக இருக்கிறது.

SRI S. RANGANATHA MUDALIAR : Sir, does 'efficient management' come under meritorious service or does the expression 'meritorious service' mean something else?

THE HON. SRI C. SUBRAMANIAM : The management may be different from the teaching staff. In some places the teacher himself might be the manager. It includes everything—how the school is being maintained, how the teaching is done, how discipline is maintained, how the extra curricular activities and school activities are being carried on and how the co-ordination between the community activities and school activities are done—all these things are taken into consideration in arriving at a decision.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது பரிட்சைக்கு அனுப்பப்படுகிற மாணவர்களில், சில பள்ளிகளில் 100-க்கு 100 பேர்கள் பாஸ் செய்து விடுகிறார்கள். சில பள்ளிகளிலிருந்து அனுப்பப்படுகிற பிள்ளைகளில் ஒருவர்கூட பாஸ் செய்யாமல் "ஸீரோ"

மார்க் வாங்குகிறார்கள். ஆக நன்கு சொல்லிக் கொடுக்கப்பட்டு "ஸெண்ட் பர்ஸெண்ட் பாஸ்" செய்கிற பள்ளிகளுக்கு அரசாங்க அங்கீகாரம் இருந்தால், அது, மற்ற பள்ளிகளும் அப்படி நன்கு வேலை செய்வதற்கு ஊக்கம் தருவதாக இராதா? ஆகவே, இது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: ஆம். நல்லமுறையில் தேறுகிற மாணவர்கள் உள்ள பள்ளிகளுக்கு நற்சான்றுப் பத்திரங்கள் மாதிரி வழங்கப்படுகின்றன. குறைவாகத் தேர்வு உள்ளவைகளிடம் ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது என்று காரணம் கேட்டு எழுதி அடுத்த வருடம் அந்தக் குறைகள் நீக்கப் பட வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

Community Development Schemes

* 36 *Q*.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any time-limit has been fixed for the introduction of Community Development Schemes in all the areas of the State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) The entire State will be covered by the Community Development Programme by the middle of the third year of the Third Five-Year Plan.

Sri N. K. PALANISAMI: இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை "ஸ்டேட்" பூராவும் விஸ்தரிப்பதற்கு உத்தேச செலவு என்னவாகும்?

The Hon. Sri C. SUBRAMANIAM: இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that in certain districts there are more Community Development Blocks than in other districts? May I know the reason for such variation?

The Hon. Sri C. SUBRAMANIAM : Initially allotments were made on a certain basis and ultimately it was found that certain districts had gained advantage over others. Now that factor has been taken into consideration in the allotment of new blocks.

Sri K. VINAYAKAM : In the matter of selection for these Community Development Blocks in the coming year, will the Government take note of the areas that have just been included in the State which has been suffering for a long time without any improvement, viz., Tirutani taluk?

The Hon. Sri C. SUBRAMANIAM : There were also Community Development Blocks in the transferred territory. But the idea is to cover the entire State.